## நம்மாழ்வார் அருளிச் செய்த
## திருவாய்மொழி
## நான்காம் பத்து

### ஏழாம் திருவாய்மொழி - சீலமில்லா
### உணர்ந்த ஆழ்வார் எம்பெருமானது திருமேனியைக் கண்டு அணைவதற்காக இரவும் பகலும் வருந்திக் கூப்பிடுதல்

** சீலம் இல்லாச் சிறியன் ஏலும் * செய் வினையோ பெரிதால் *
ஞாலம் உண்டாய்! ஞான மூர்த்தீ! * நாராயணா! என்றென்று **
காலம் தோறும் யான் இருந்து * கை தலை பூசல் இட்டால் *
கோல மேனி காண வாராய் * கூவியும் கொள்ளாயே 1

கொள்ள மாளா இன்ப வெள்ளம் * கோதில தந்திடும் * என்
வள்ளலேயோ! வையம் கொண்ட * வாமனாவோ! என்றென்று **
நள் இராவும் நன் பகலும் * நான் இருந்து ஓலம் இட்டால் *
கள்ள மாயா! உன்னை * என் கண் காண வந்து ஈயாயே 2

ஈவிலாத தீ வினைகள் * எத்தனை செய்தனன் கொல்? *
தாவி வையம் கொண்ட எந்தாய்! * தாமோதரா! என்றென்று **
கூவிக் கூவி நெஞ்சுருகிக் * கண் பனி சோர நின்றால் *
பாவி நீ என்று ஒன்று சொல்லாய் * பாவியேன் காண வந்தே 3

காண வந்து என் கண் முகப்பே * தாமரைக் கண் பிறழ *
ஆணி செம்பொன் மேனி எந்தாய்! * நின்றருளாய் என்றென்று **
நாணம் இல்லாச் சிறு தகையேன் * நான் இங்கு அலற்றுவதென்? *
பேணி வானோர் காண மாட்டாப் * பீடுடை அப்பனையே 4

அப்பனே! அடல் ஆழியானே! * ஆழ் கடலைக் கடைந்த
துப்பனே! * உன் தோள்கள் நான்கும் * கன்டிடக் கூடுங்கொல்? என்று **
எப்பொழுதும் கண்ண நீர் கொண்டு * ஆவி துவர்ந்து துவர்ந்து *
இப்பொழுதே வந்திடாய் என்று * ஏழையேன் நோக்குவனே 5

நோக்கி நோக்கி உன்னைக் காண்பான் * யான் எனதாவி உள்ளே *
நாக்கு நீள்வன் ஞானம் இல்லை * நாள் தோறும் என்னுடைய **
ஆக்கை உள்ளும் ஆவி உள்ளும் * அல்ல புறத்தின் உள்ளும் *
நீக்கம் இன்றி எங்கும் நின்றாய்! * நின்னை அறிந்து அறிந்தே 6

அறிந்து அறிந்து தேறித் தேறி * யான் எனதாவி உள்ளே *
நிறைந்த ஞான மூர்த்தியாயை * நின்மலம் ஆக வைத்து **
பிறந்தும் செத்தும் நின்று இடறும் * பேதைமை தீர்ந்து ஒழிந்தேன் *
நறுந்துழாயின் கண்ணி அம்மா! * நான் உன்னைக் கண்டு கொண்டே 7

கண்டு கொண்டு என் கைகள் ஆர * நின் திருப்பாதங்கள் மேல் *
எண் திசையும் உள்ள பூக் கொண்டு * ஏத்தி உகந்து உகந்து **
தொண்டரோங்கள் பாடி ஆடச் * சூழ் கடல் ஞாலத்துள்ளே *
வண்துழாயின் கண்ணி வேந்தே! * வந்திட கில்லாயே 8

இட கிலேன் ஒன்று அட்ட கில்லேன் * ஐம்புலன் வெல்ல கில்லேன் *
கடவன் ஆகிக் காலம் தோறும் * பூப் பறித்து ஏத்த கில்லேன் **
மட வன்னெஞ்சம் காதல் கூர * வல்வினையேன் அயர்ப்பாய் *
தடவுகின்றேன் எங்குக் காண்பன் * சக்கரத்து அண்ணலையே? 9

சக்கரத்து அண்ணலே! என்று * தாழ்ந்து கண்ணீர் ததும்ப *
பக்கம் நோக்கி நின்று அலந்தேன் * பாவியேன் காண்கின்றிலேன் **
மிக்க ஞான மூர்த்தி ஆய * வேத விளக்கினை * என்
தக்க ஞானக் கண்களாலே * கண்டு தழுவுவனே 10

** தழுவி நின்ற காதல் தன்னால் * தாமரைக் கண்ணன் தன்னை *
குழுவு மாடத் தென்குருகூர் * மாறன் சடகோபன் ** சொல்
வழுவிலாத ஒண்தமிழ்கள் * ஆயிரத்துள் இப்பத்தும் *
தழுவப் பாடி ஆட வல்லார் * வைகுந்தம் ஏறுவரே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---